தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாசனத்துக்கு மேட்டூர் அணை திறப்பு



காவிரி டெல்டா பாசனப் பகுதி விவசாயத்துக்காக மேட்டூர் அணை ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது. வழக்கத்தைக் காட்டிலும் 59 நாள்கள் தாமதமாக அணை திறக்கப்பட்ட போதிலும், சம்பா நெல் சாகுபடி முழுமைக்கும் தண்ணீர் கிடைக்கக் கூடிய நிலை இருப்பது டெல்டா விவசாயிகளுக்கு ஆறுதல் அளிப்பதாக உள்ளது. சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12-ஆம் தேதி பாசனத்துக்காக காவிரியில் தண்ணீர் திறக்கப்படும். ஆனால், அணையில் இருக்கும் தண்ணீரின் அளவைப் பொருத்தும், அணைக்கான நீர்வரத்தைப் பொருத்தும் அணை திறக்கப்படும் நாள் வேறுபடும்.

ஜூன் 12-ஆம் தேதி திறக்கப்படும் அணை ஜனவரி 28-ஆம் தேதி நிறுத்தப்படும். இந்தக் காலகட்டத்தில் சுமார் 320 டி.எம்.சி. தண்ணீரைப் பயன்படுத்தி சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, தஞ்சை, பெரம்பலூர், திருவாரூர், நாகை, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள சுமார் 16 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களில் குறுவை, சம்பா, தாளடி ஆகிய முப்போக நெல் பயிர்கள் விளைவிக்கப்படும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், குறிப்பிட்ட காலத்தில் அணை

திறக்கப்படவில்லை. கடந்த 2011-ஆம் ஆண்டில் பருவமழையைக் கருத்தில் கொண்டு ஜூன் 6-ஆம் தேதியே அணை திறக்கப்பட்டது. ஆனால், 2012-ஆம் ஆண்டில் போதிய தண்ணீர் இல்லாததால் செப்டம்பர் 17-ஆம் தேதிதான் அணை திறக்கப்பட்டது. இருப்பினும், தொடர்ச்சியாக தண்ணீர் வழங்க முடியாததால் முப்போக விளைச்சல் கிடைக்கவில்லை. இதே நிலை கடந்த ஆண்டும் தொடர்ந்தது. வரலாற்றில் மோசமான அளவுக்கு சுமார் 15 அடி வரையிலும் அணையின் நீர் இருப்பு குறைந்தது. இருப்பினும், ஜூலை இறுதியில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதையடுத்து, கடந்த ஆண்டில் ஆகஸ்ட் 2-ஆம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது. இதேபோல, நிகழாண்டிலும் போதிய நீர் இருப்பு இல்லாததால் ஜூன் 12-ஆம் தேதி குறுவை நெல் பாசனத்துக்கு அணை திறக்கப்படவில்லை. கடந்த 2 வாரங்களாக காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதையடுத்து, ஆகஸ்ட் 15-ஆம் தேதி அணை திறக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா முதலில் அறிவித்தார். இருப்பினும், நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்ததால் அணையின் நீர்மட்டம் 109 அடியாக இருந்த நிலையில், அறிவிக்கப்பட்டதற்கு முன்னதாகவே ஞாயிற்றுக்கிழமை அணை திறக்கப்பட்டது. மேட்டூரில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் தமிழக நிதி, பொதுப் பணித் துறை அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி, தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி, போக்குவரத்துத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜி, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டு பாசனத்துக்காக அணையைத் திறந்து வைத்தனர். சேலம் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம், பொதுப் பணித் துறையின் திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் பைந்தமிழ்ச்செல்வன், சேலம் எம்.பி. பன்னீர்செல்வம், எம்.எல்.ஏ.க்கள், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். முதல்வர் ஜெயலலிதாவின் உத்தரவுப்படி, அணையில் இருந்து நொடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இந்த நீர் அடுத்த இரண்டு வாரங்களில் டெல்டா மாவட்டங்களைச் சென்றடையும். அணைக்கான நீர்வரத்தைப் பொருத்து, நீர் வெளியேற்றம் அதிகரிக்கப்படும் என்று

பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து 3 ஆண்டுகளாக குறுவை நெல் சாகுபடியை இழந்துள்ள டெல்டா மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடிக்கான நாற்று விடும் பணியை விரைவில் தொடங்க உள்ளனர். சம்பா சாகுபடி முழுமைக்கும் தண்ணீர் கிடைக்கும் நிலை இருப்பதால், வேளாண் துறையின் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி கடந்த ஆண்டைப் போலவே கூடுதல் சாகுபடி பெறும் முனைப்பில் விவசாயிகள் உள்ளனர்.

<u>ஒகேனக்கல்லில் நீர்வரத்து குறைந்தது</u>

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றுக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை 55 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து சனிக்கிழமை 80,000 கன அடியாக இருந்தது. இந்த நிலையில், கர்நாடக அணைகளில் இருந்து நீர் திறப்பு குறைக்கப்பட்டதால், ஞாயிற்றுக்கிழமை நீர்வரத்து 55,000 கன அடியாகக் குறைந்தது. இருப்பினும், பிரதான அருவிக்குச் செல்லும் நடைபாதையில் தண்ணீர் செல்வதால் அருவிப் பகுதி மட்டுமன்றி ஊட்டமலை, ஆலம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் போலீஸார், தீயணைப்புத் துறை, வனத் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

**<u>பூக்களின் விலை உயர்வு</u>**

ஆடி மாதத்தை முன்னிட்டு சென்னையில் பூக்களின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் குறைவான விலையில் விற்பனையான பூக்கள் தற்போது 10 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை அதிக விலைக்கு விற்பனையாகின்றன. விலையேற்றம் காணப்பட்டாலும் வாங்குவோரின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது.

இதுகுறித்து கோயம்பேடு பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் அருள்விசுவாசம் கூறியது: சென்னைக்கு பெரும்பாலும் கர்நாடகம், தமிழகம் ஆகிய மாநிலங்களின் எல்லைப் பகுதியிலிருந்துதான் பூக்கள் அதிகமாக வருகின்றன. இந்தப் பகுதிகளில் கடந்த காலங்களில் சரிவர மழை பெய்யவில்லை. அதனால் விளைச்சல் சரிந்து, சென்னைக்கு வரும் பூக்களின் வரத்தும் குறைந்துள்ளது. இதுதவிர, தற்போது ஆடி மாதத்தினை முன்னிட்டு கோயில் விழாக்கள், பண்டிகைகள் அதிகளவில் நடைபெறுவதாலும் பூக்களின் தேவை அதிகளவில் உள்ளது. ஆனால் அதிக தேவைக்கேற்ப வரத்து இல்லாததால் விலை உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றம் அடுத்த மாதத்தில் வரும் விநாயகர் சதுர்த்தி வரை தொடரும் என்றார் அருள்விசுவாசம்.

**சென்னை கோயம்பேடு சந்தையில் ஞாயிற்றுக்கிழமை விற்பனையான பூக்களின் விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குறிக்குள் ஒரு மாதத்துக்கு முன்பு இருந்த விலை):**

மல்லி ரூ.300 (200)

சாமந்தி ரூ.300 (200)

அரளி ரூ.200 (130)

கோழிகொண்டை ரூ.150 (70)

ஜாதி முல்லை ரூ.200 (100)

முல்லை ரூ.250 (180)

செண்டுமல்லி ரூ.70 (30)

சம்மங்கி ரூ.200 (130)

ரோஜா ரூ.120 (50)

5 ஸ்டார் ரோஜா ரூ.150 (70)

பன்னீர் ரோஜா ரூ.150 (70)

டிஸ்கோதே ரோஜா (20 பூ) ...ரூ.100 (50)

தாஜ்மஹால் ரோஜா ரூ.5 (2)

தாமரை (ஒரு பூ) ரூ.5 (1)

**<u>வெங்காயம், முட்டைகோஸ் விலை குறைவு</u>**

சென்னை கோயம்பேடு சந்தையில் வெங்காயம், முட்டைகோஸ் விலை குறைந்துள்ளது. சென்னையில் கடந்த சில வாரங்களாக நீடித்த காய்கறிகளின் விலையேற்றம் தற்போது குறைந்துள்ளது. இதுகுறித்து கோயம்பேடு காய்கறி வியாபாரிகள் சங்க ஆலோசகர் செப்ந்தர்ராஜன் கூறியது:

கடந்த காலங்களில் தேவை அதிகரித்து காணப்பட்டதால் விலை அதிகரித்தது. தற்போது சென்னையில் பரவலாக மழை பெய்து வருவதாலும், ஆடி மாதம் காரணமாக திருமணம் உள்ளிட்ட சுப நிகழ்ச்சிகள் குறைவாக நடப்பதாலும் காய்கறிகளை வாங்குவோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. இதனால் காய்கறிகளின் தேவை குறைந்து, விலையும் சரிந்துள்ளது.

இதில் முக்கியமாக அதிக விலையேற்றத்தை சந்தித்த வெங்காயம், தக்காளி, முட்டைகோஸ், கொத்தமல்லி உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. அதே சமயம் சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்டவற்றின் விலை அதிகரித்துள்ளது என்றார்.

**சென்னை கோயம்பேடு சந்தையில் ஞாயிற்றுக்கிழமை காய்கறிகளின் விலை நிலவரம் கிலோவில் (அடைப்புக்குள் பழைய விலை)**

நாட்டுத் தக்காளி 40 (50)

பெங்களூர் தக்காளி 50 (60)

வெங்காயம் 22 (30)

சின்ன வெங்காயம் 35 (30)

முட்டைகோஸ் 8 (18)

கேரட் 40 (40)

இஞ்சி (புதியது) 50 (70)

இஞ்சி (பழையது) 100 (120)

கொத்தமல்லி (ஒரு கட்டு) 10 (40)

பீன்ஸ் 50 (70)

உருளைக்கிழங்கு 28 (20)

பச்சை மிளகாய் 25 (30)

முருங்கைக்காய் 35 (50)

பீட்ரூட் 18 (25)

செப்செப் 20 (25)

சேப்பங்கிழங்கு 30 (35)

சேனைக்கிழங்கு 25 (25)

பாகற்காய் 30 (30)

வெண்டைக்காய் 20 (25)

அவரைக்காய் 50 (60)

கத்திரிக்காய் 15 (20)

பச்சை பட்டாணி 100 (100)

கோவைக்காய் 15 (20)

## தமிழகத்தில் இன்று மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு




தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வெப்பச் சலனம் காரணமாக சென்னையில் இன்று மாலை அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வரும் நிலையில் நேற்று தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக நீலகிரி மற்றும் தஞ்சை மாவட்டம், திருவையாற்றில் பெய்த மழையினால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டியில் 8 செ.மீ., திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி, கடலூர் மாவட்டம் நெய்வேலியில் தலா 6 செ.மீ., காஞ்சீபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் 5 செ.மீ., சேலம் மாவட்டம் ஏற்காடு, விழுப்புரம் மாவட்டம் மரக்காணம், கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை, புதுக்கோட்டை மாவட்டம் இழுப்பூர், கோவை மாவட்டம் வால்பாறை, வேலூர் மாவட்டம் அரக்கோணம் ஆகிய இடங்களில் 4 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கபப்பட்டுள்ளது. பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால் புனல்

மின்சாரம் உற்பத்தி மேட்டூர் அணை திறக்கப்பட்டதால் அணை, சுரங்கம், கதவணை மின் நிலையங்கள் மூலம் நீர் மின் உற்பத்தி தொடங்கியது.

மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படும் அதே நேரத்தில் புனல் மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையில் உள்ள சுரங்க மின் நிலையத்தில் இருந்து அதிகபட்சம் 200 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். அதேபோல அணை மின் நிலையத்தில் இருந்து 60 மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இதைத் தவிர, காவிரி ஆற்றின் இடையே செக்கானூர், நெரிஞ்சிப்பேட்டை, குதிரைக்கல்மேடு, கல்வடங்கம், பவானி கட்டளை, வெண்டிப்பாளையம் ஆகிய 6 இடங்களில் கட்டப்பட்டுள்ள கதவணை மின் நிலையங்கள் மூலம் தலா 30 மெகாவாட் வீதம் 180 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். மேட்டூர் அணையில் இருந்து ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 9 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் அணை மின் நிலையம், சுரங்க மின் நிலையங்கள் மூலம் சுமார் 170 மெகாவாட் மின் உற்பத்தித் தொடங்கியதாக மின்வாரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

<u>புதினா பயிர் சாகுபடி குறித்த பயிற்சிக்கூட்டம்</u>

போளூரை அடுத்த ஜவ்வாதுமலை பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் விவசாயிகளுக்கு புதினா பயிர் சாகுபடி குறித்த பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது.

போளூரை அடுத்த ஜவ்வாதுமலை வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா)திட்டத்தின் கீழ் ஜவ்வாதுமலை பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் புதினா பயிர் சாகுபடி குறித்த பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்)பழனிவேல் விவசாயிகளிடையே பேசுகையில், புதினா பயிரானது மிக எளிதில் பயிர் செய்யக்கூடியது. இந்த புதினா பயிரானது முதல் அறுவடை 60 நாள்களுக்குள் சாகுபடி செய்து பயன்பெறலாம். மேலும் வருடத்துக்கு 5 முறை அறுவடை செய்ய வாய்ப்புள்ளது. இதனை தண்ணீர் தேங்காத இடங்களில் பயிர் செய்யலாம். நுண்ணிய பாசன முறையில் தெளிப்பு நீர் மற்றும் சொட்டு நீர் பாசன முறையிலும் பயிர் செய்ய முடியும். மேலும் 365 நாள்களும் புதினா சாகுபடியால் வேலைவாய்ப்பினை பெருக்கலாம். புதினாவின் இலையைக் கொண்டு நீர் ஆவி மூலம் எண்ணை தயாரிக்க முடியும் எனத் தெரிவித்தார். கூட்டத்தில் இந்திய கிராமப்புற மேம்பாட்டு நிறுவனத் தலைவர் லட்சுமணன், திருவண்ணாமலை

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் சுந்தரம், வேளாண்மை உதவி இயக்குநர்கள் வடமலை (போளூர்), ஆல்பர்ட் ராபின்சன், வேளாண்மை அலுவலர் சுதாகர், வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வபாண்டியன் மற்றும் அலுவலர்கள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## <u>மா மரங்களுக்கு கவாத்து: செயல்முறை விளக்கத்துக்கு விவசாயிகள் பதிவு செய்யலாம்</u>

சிவகங்கை மாவட்டம் எஸ். புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் மா சாகுபடி விவசாயிகள், கவாத்து முறை செயல்விளக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பதிவு செய்யலாம் என்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் தெரிவித் துள்ளார். இதுகுறித்து அவர் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மா மரங்களுக்கு சிறப்பான வடிவத்தையும், அதிக மகசூல் கிடைக்கவும் கவாத்து செய்வது அவசியம். மூன்று ஆண்டுகளுக்குள்பட்ட மா மரங்களில் தரையிலிருந்து 3 முதல் 4 அடி உயரத்தில் இருந்து மூன்று கிளைகள் அனுமதித்து ஒவ்வொரு கிளைகளிலும் 3 அடி உயரத்தில் மேலும் 3 அல்லது 4 கிளைகள் அனுமதித்து கவாத்து செய்வதின் மூலம் சிறந்த மரத்துக்கான வடிவத்தை பெறலாம்.

இதன்மூலம் மரங்களுக்கு உரமிடுதல், களையெடுத்தல் பண்ணை இயந்திரக்கருவிகளை பயன்படுத்துதல் போன்றவை எளிதாகும். கவாத்து செய்யாவிட்டால் 5 ஆண்டுகளில் மரக்கிளைகள் பல கோணல்களாக வளர்ந்து சூரிய வெளிச்சம், தெளிவான காற்றோட்ட மின்றி பூக்கும் கிளைகள் குறைந்து மகசூலும் குறையும். எஸ். புதூர் ஒன்றியத்தில் உள்ள 3 ஆண்டுகளுக்குட்பட்ட மாந்தோப்புகளில் மாமரம் கவாத்து செய்யும்முறை குறித்து செட்டிநாடு மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலைய தோட்டக்கலை பேராசிரியர், குன்றக்குடி தோட்டக்கலை பேராசிரியர், எஸ். புதூர் ஒன்றிய தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ஆகியோரால் வருகிற 25-ஆம் தேதி முதல் மாந்தோப்பினை நேரடியாக பார்வையிட்டு ஆய்வு செய்து செயல்விளக்கம் அளிக்கவுள்ளனர்.

எனவே மாங்கன்றுகள் நட்டுள்ள விவசாயிகள் செயல்முறை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள எஸ்.புதூர் ஒன்றிய தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் தங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் 22.08.2014-ந்தேதிக்குள் பதிவு செய்து பயனடைய லாம். விவரங்களுக்கு 9443925074, 9443869408 ஆகிய கைப்பேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## சம்பா நேரடி விதைப்பு விழிப்புணர்வு முகாம்

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே சம்பா நேரடி நெல் விதைப்பு விழிப்புணர்வு முகாமில் தமிழக வேளாண் துறை இயக்குநர் முனைவர் எம். ராஜேந்திரன் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பை தொடங்கிவைத்தார்.

மணலி கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து, மாவட்ட ஆட்சியர் மா. மதிவாணன் பேசியது:

டெல்டா பாசனப் பகுதியில் 12 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் திருவாரூர் மாவட்டத்தில் வழக்கமாக 3,40,038 ஏக்கரில் சம்பா, தாளடி சாகுபடி மேற்கொள்ளப்படும். மேட்டூர் அணை சரியான தருணத்தில் திறந்துவிடப்பட்டுள்ளதால் 3,02,038 ஏக்கரில் சம்பாவும், 64,888 ஏக்கரில் தாளடியும் சாகுபடி செய்யப்பட உள்ளது. இதில் 1,91,178 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர். நிகழ்ச்சியில் இயந்திரம் மூலம் நேரடி நெல் விதைப்பை தொடங்கிவைத்து தமிழக வேளாண் துறை இயக்குநர் முனைவர் எம். ராஜேந்திரன் பேசியது:

காவிரி பாசன மாவட்ட விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டே தமிழக முதல்வர் மேட்டூர் அணையை ஆக 10-ல் திறக்க உத்தரவிட்டுள்ளார். கடைமடை பகுதிக்கு தண்ணீர் வருவதற்கு முன்பே நேரடி விதைப்பு பணிகளை முடித்து விட வேண்டும். நேரடி விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள் லேசர் இயந்திரம் மூலம் நிலத்தை சமன்படுத்திய பின்னர், நேரடி விதைப்பு செய்ய வேண்டும்.

விவசாயிகள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, திருந்திய நெல் சாகுபடி முறையை மேற்கொண்டு அரசு நிர்ணயித்துள்ள நெல் உற்பத்தி இலக்கை அடைய உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். நிகழ்ச்சியில் மாவட்ட வேலாண் இணை இயக்குநர் மயில்வாகனன், துணை இயக்குநர் த. நடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விதை பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

விழுப்புரம் விதை பரிசோதனை நிலையத்தில் விவசாயிகள் தங்களது விதைகளை பரிசோதனை செய்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, வேளாண் அலுவலர் பிரேமலதா வெளியிட்ட செய்திக் குறிப்பு: விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் செயல்படும் விதை பரிசோதனை நிலையத்தின் சேவைகளை மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக்

கொள்ளலாம். இங்கு விதையின் ஈரப்பதம், முளைப்புத் திறன், புறத் தூய்மை மற்றும் பிற ரக கலப்பு விகிதம், பூச்சித் தாக்குதல் ஆகியவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பயிருக்கும் விதை மாதிரியின் அளவு மாறுபடும். விதை பரிசோதனைக்கு விதை மாதிரி சேகரிக்கும் போது நெல் விதை 400 கிராம், மக்காச் சோளம் 1 கிலோ, சோளம் 900 கிராம், கேழ்வரகு 60 கிராம், கம்பு 150 கிராம், உளுந்து 1 கிலோ, எள் 70 கிராம், பருத்தி 250 கிராம், நிலக்கடலை 1 கிலோ என்ற அளவில் அனுப்ப வேண்டும். விதை மாதிரியின் விவரம், தேவைப்படும் பகுப்பாய்வு முடிவுகள் மற்றும் முடிவுகள் அனுப்ப வேண்டிய முகவரியை விழுப்புரம் விதைப் பரிசோதனை வேளாண்மை அலுவலருக்கு கடிதம் மூலம் அனுப்ப வேண்டும். ஒரு விதை மாதிரிக்கு ரூ.30 பரிசோதனைக் கட்டணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத் திறன் பகுப்பாய்வு 14 நாள்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. பகுப்பாய்வு முடிந்தவுடன் முடிவறிக்கை குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## பிபிடி விதை நெல்லுக்கு மானியம் வழங்கக் கோரிக்கை

தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு கரம் நீட்டி வரும் தமிழக முதல்வர், பிபிடி விதை நெல்லை மானிய விலையில் வழங்க உத்தரவிட வேண்டும் என கொள்ளிடம் கீழணை விவசாயிகள் பாதுகாப்பு சங்க துணைத் தலைவர் கே.வி.கண்ணன் பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

பிபிடி-5404 என்ற விதை நெல் ஆந்திராவிலிருந்து 20 ஆண்டுகளுக்கு முன்பு சம்பா மசூரி என்ற பெயரில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நெல்லுக்கு ஆண்டு தோறும் மத்திய அரசு கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியம் வழங்கி வந்தது. இந்த ஆண்டு தமிழக வேளாண் துறை அதிகாரிகள் இரண்டு முறை புது தில்லி சென்று வேண்டுகோள் விடுத்தும் மத்திய அரசு மானியம் வழங்க மறுத்துவிட்டது. 20 ஆண்டுகளுக்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்ட நெல்லுக்கு மானியம் வழங்கப்படாது என்ற கொள்கை முடிவின் அடிப்படையில் நிறுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. பிபிடி நெல் ரகம் தமிழக காவிரி டெல்டா விவசாயிகளின் முக்கிய ஆதாரமாக விளங்கி வருகிறது. டெல்டா விவசாயிகள் 90 சதவீதம் பேர் இந்த நெல்லையே பயிரிட்டு வருகின்றனர். இது 135 நாள் வயதுடைய நடுத்தர வயது பயிராகும். இந்த ஆண்டு மேட்டூர் அணை தாமதமாக திறக்கப்பட்டுள்ளதால், இந்த நெல்லையே பெரும்பாலான விவசாயிகள் பயிரிட விரும்புகின்றனர். மிகவும் சன்ன ரகமான பிபிடி நெல் பச்சை, புழுங்கல் அரிசி ஆகிய இரண்டுக்கும் ஏற்றவையாகும்.

அறுவடை சமயத்தில் மற்ற நெல்லை விட மூட்டைக்கு ரூ.100 விலை அதிகம் கிடைக்கும். எனவே மத்திய அரசு உடனடியாக பிபிடி விதை நெல்லுக்கு மானியம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும். இல்லையெனில் தமிழக முதல்வர், மாநில அரசு மூலம் மானியம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நாட்டின் தேயிலை உற்பத்தி14 கோடி கிலோவாக வளர்ச்சி</u>**



மும்பை :சென்ற ஜூன் மாதத்தில் இந்தியாவின் தேயிலை உற்பத்தி, 14.13 கோடி கிலோவாக வளர்ச்சி கண்டுள்ளது. இது, கடந்தாண்டு இதே மாதத்துடன் ஒப்பிடுகையில், 3.3 சதவீதம் அதிகம் என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.குறிப்பாக, தமிழகத்தில், இதன் உற்பத்தி, கணக்கீட்டு மாதத்தில், 11.2 சதவீதம் உயர்ந்து, 2.12 கோடி கிலோவாக அதிகரித்துள்ளது. அதேசமயம், அசாம் மாநிலத்தில், இதன் உற்பத்தி, 5.62 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 7.04 கோடி கிலோவாக குறைந்துள்ளது என, வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.மழை பற்றாக்குறை மற்றும் வெப்பநிலை உயர்ந்து வருவது போன்றவற்றால்,

நடப்பாண்டில், அசாமில் தேயிலை உற்பத்தி, 10 சதவீதம் சரிவடையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தியில், இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது.நம்நாட்டின், சி.டி.சி., ரக தேயிலை, அதிகளவில், எகிப்து தியாகதுருகம் : தியாகதுருகம் பகுதியில் பெய்த மழை ஈரத்தை பயன்படுத்தி மானாவாரி பருத்தி விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்கி உள்ளனர். தியாகதுருகம் பகுதியில் உள்ள 25 க்கும் மேற்பட்ட கிராமங்களில் 7 ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஆண்டு தோறும் மானாவாரி நிலங்களில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு பெய்த அளவான மழை காரணமாக பஞ்சு மகசூல் அதிகரித்து பலர் லாபமடைந்தனர். இவ்வாண்டு மீண்டும் பருத்தி சாகுபடி செய்வதற்கு ஆயத்தப் பணிகளை ஜூன் மாதமே துவக்கி விட்டனர்.தென் மேற்கு பருவ மழை துவக்கத்தில் கிடைத்த ஈரத்தை பயன்படுத்தி நிலத்தை உழுது, சாண எருவை தூவி தயார்படுத்தினர். மழை ஏமாற்றியதால் விதைப்பு பணிகளை துவக்க முடியாமல் தவித்தனர். பருவம் தவறி விதைத்தால் மகசூல் பாதிக் கும் கவலை ஏற்பட்டது. வெப்ப சலனம் காரணமாக தியாக துருகம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நல்ல மழை பெய்தது.இதனால் நிலத்தின் ஈரத்தன்மை அதிகரித்து இப்பகுதியில் மானாவாரி பருத்தி விதைப்பு பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். கடந்த ஆண்டை போலவே இவ்வாண்டும் நல்ல லாபம் கிடைக்கும் என்று நம்பிகையுடன் உள்ளனர். , பாகிஸ்தான் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.இதே போன்று, உயர்ரக ஆர்த்தோடாக்ஸ் தேயிலை, ஈராக், ஈரான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## <u>விவசாயிகளுக்கு மானியத்தில் ஜிப்சம் : நம்பியூர் வேளாண் அதிகாரி தகவல்</u>

கோபிசெட்டிபாளையம்: நம்பியூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில், மானாவாரியாக நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலைக்கு, ஜிப்சம் உரம் இடுவதால் கூடுதல் மகசூல் கிடைப்பதாக வேளாண் துறையினர் தெரிவித்தனர். இதுபற்றி, நம்பியூர் வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி கூறியதாவது:தமிழகத்தில், 52 சதவீத மானாவாரி நிலமாகவும், இந்நிலங்களில்

பயிரிடப்பபடும் பயிர்களில், 14 சதவீதம் எண்ணெய் வித்துக்கள் உள்ளன. அதில் நிலக்கடலை, முக்கிய மானவாரி பயிராகும். 80 சதவீததத்துக்கு மேல், நிலக்கடலை பயிரையே, மானாவாரி நிலங்களில், பயிர் செய்கின்றனர். தாவர எண்ணெய் உற்பத்தியில், நிலக்கடலை முக்கிய இடம் வகிக்கிறது.மானாவாரியாக நிலக்கடலை சாகுபடி செய்யும்போது, மகசூலை அதிகரிக்க ஜிப்சம் பயன்படுகிறது.ஜிப்சம் உரத்தின் ரசாயனப்பெயர் கால்சியம் சல்பேட்டாகும். இதில், கால்சியம் என்ற சுண்ணாம்பு சத்து, 18 சதவீதம் முதல், 23 சதவீதம் வரையிலும், கந்தகச்சத்து (சல்பர்), 18 சதவீதம் வரை உள்ளது.கந்தகச்சத்து குறைபாட்டால், விளைச்சல் குறைவதுடன், எண்ணெயின் அளவும் குறைகிறது.பயிர் வளர்ச்சி குன்றி, வேர் முடிச்சுகள் பாதிப்படைவதால், தழைச்சத்து நிலைநிறுத்துவதும் பாதிக்கப்படுகிறது. எனவே, ஜிப்சம் இடுவதால் இந்த குறைபாடுகள், நீங்கும்.ஜிப்சம் இடுவதால், மண் இறுக்கம் குறைந்து, நிலக்கடலை காய்களின் பருமன் ஒரே சீராகவும், திரட்சியாகவும் இருக்கும். நிலக்கடலை பருப்பு விதைக்கும்போது, ஏக்கருக்கு, 80 கிலோவும், விதைத்த, 45வது நாளில் களை வெட்டி மண் அணைக்கும்போது, ஏக்கருக்கு, 80 கிலோ, என, இரு முறை மொத்தம், 160 கிலோ, ஜிப்சம் இடவேண்டும். நிலக்கடலை மட்டுமல்லாது, களர் மண் நிலங்களின் பயிர் மகசூலை கூட்டவும், ஜிப்சம் செயல்படுகிறது. நெல், கரும்பு உள்ளிட்ட பல்வேறு பயிர்சாகுபடியின்போதும், ஜிப்சமிட்டு நிலத்தை மேம்படுத்தலாம். தற்போது, நம்பியூர் வட்டாரத்தில் உள்ள நம்பியூர், குருமந்தூர் ஆகிய வேளாண் விரிவாக்க மையங்களில், 50 சதவீதம் மானிய விலையில், ஏக்கருக்கு, 750 ரூபாய் மானியத்தில் அனைத்து விவசாயிகளுக்கும் ஜிப்சம் வழங்கப்படுகிறது. ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள், இந்த வாய்ப்பை பயன்படுத்தி, தங்களது ரேஷன் கார்டு நகலுடன், சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, பெற்றுக்கொள்ளலாம், என்றனர்.

## <u>அவரை விவசாயிகளுக்கு "ஜாக்பாட்'</u>

தேவாரம் : தேவாரம் பகுதியில் அவரை விளைச்சல் அமோகமாக உள்ளது. நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தேவாரம், லட்சுமிநாயக்கன்பட்டி, டி.மீனாட்சிபுரம், தம்மிநாயக்கன்பட்டி, பொட்டிப்புரம் பகுதியில் உள்ள இறவை பாசன நிலங்களில், 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் காய்கறி சாகுபடி நடக்கிறது. குறுகிய கால பயிர்களான காய்கறி சாகுபடி நல்ல லாபம் கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வமுடன் பயிரிடுகின்றனர். தேவாரம் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் அவரை பயிரிடப்பட்டுள்ளது. சாரல் மழையுடன் இதமான சீதோஷ்ண நிலை உள்ளதால், அவரை நல்ல விளைச்சல் கண்டுள்ளது.நடப்பு வாரத்தில் கிலோ 40 ரூபாய்க்கு மேல் மொத்த விலையில் விற்பனையாவதால், விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது. கோணாம்பட்டி விவசாயி செல்வம் கூறுகையில், "மற்ற பகுதியில் வறட்சி நிலவுவதால், காய்கறி உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இறவை பாசன நிலங்களில் பயிரிடப்பட்டுள்ள அவரை நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. தேவாரம் தினசரி மார்க்கெட்டில், கிலோ 40 ரூபாய்க்கு மேல் விற்பனையாவதால், அவரை பயிரிட்ட விவசாயிகளுக்கு "ஜாக்பாட்' அடித்துள்ளது. ஏக்கருக்கு செலவு போக 50 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும், என்றார்'.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஓரிரு நாளில் மேட்டூர் அணை நிரம்பும்..!**




மேட்டூர்: மேட்டூர் அணை அதன் முழுகொள்ளளவான 120 அடியை ஓரிரு நாளில் எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அணையின் நீர் மட்டம் 111 அடியை எட்டியுள்ள நிலையில் நீர் வரத்து வினாடிக்கு 42 ஆயிரம் கனஅடியாக உள்ளது. அணையிலிருந்து பாசனத்திற்காக வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி நீர் மட்டுமே வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்போது தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை பரவலாக பெய்து வரும் நிலையில் ஓரிரு நாளில், கர்நாடகத்தில் மழை மீண்டும் துவங்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. தற்போது கர்நாடகத்தில் மழை குறைந்திருந்தாலும் அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து மொத்தம் 28 ஆயிரம் கனஅடி நீர் காவிரியில் திறக்கப்பட்டு வருகிறது.

இதனால் மேட்டூர் அணைக்கான நீர்வரத்து தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீர்வரத்து தொடர்வதால் மேட்டூர் ஓரிரு நாளில் அதன் முழுக் கொள்ளளவான 120 அடியை எட்டும் என்று எதிர்பார்ப்பு நிலவுகிறது.

**ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி சார்பில் வாழைக்கன்று நேர்த்தி செயல்முறை விளக்கம்**

காவேரிப்பாககம், :காவேரிப்பாககம் ஒன்றியத்துகசு உட்பட்ட கட்டளை கிராமத்தில் ஆதிபராசகதி வேளாண்மை கல்லுரி சார்பில் ஊரக வேளாண்மை செயல்திட்ட அனுபவம் என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சண்முகம் என்ற விவசாயின் தோட்டத்தில் வாழைககன்று நேர்த்தி செய்முறையை கல்லூரி மாணவிகள் செய்து காட்டினர். உதவி தோட்டககலை அலுவலர் முன்னிலையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் அப்பகுதியை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண் கல்லூரி மாணவிகளின் இந்த நிகழ்ச்சியின் மூலம் அப்பகுதியில் வாழையை முககிய பயிராக நடவு செய்த விவசாயிகள் பயன் பெற்றனர். இந்த வாழைககன்று நேர்த்தியின் மூலம் நுற்புழுவை கட்டுப்படுத்தலாம். இதனால் எந்த விதமான பாதிப்பும் இல்லாமல் அந்த வாழைககன்று வளரும் என்பதை செய்முறை மூலம் மாணவிகள் விவசாயிகளுககு தெளிவுப்படுத்தினார்கள்.

**விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்**

பேரணாம்பட்டு, : பேரணாம்பட்டு ஒன்றிய விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம் பேரணாம்பட்டில் நடைபெற்றது. ஒன்றிய தலைவர் ரகுபதி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் வெங்கடபதி, மாவட்ட செயலாளர் உதயகுமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நிர்வாகிகள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தலைவர் லோகநாதன் வரவேற்று பேசினார். காட்டுபன்றியை வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்திலிருந்து நீக்க கோருவது, மொரசப்பல்லி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் சுமார் ரூ.1 கோடியே 40 லட்சம் ஊழல் நடந்தது தெரியவந்துள்ளது. எனவே கூட்டுறவு சங்க நிர்வாகத்தை கலைத்து விட்டு முறையாக தேர்தலை நடத்துவது, விவசாயிகளின் கூட்டுறவு மற்றும் தேசிய

வங்கிகளில் உள்ள அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்யவேண்டும், தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடரில் விவாதத்தின் போது பேசிய வருவாய் துறை அமைச்சர் உதயகுமார் தமிழகத்தில் வறட்சி இல்லை என தவறாக கூறிய தகவலை அவைகுறிப்பிலிருந்து நீக்கும் வரை பல்வேறு தொடர் போராட்டங்களை நடத்துவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**<u>ராணிப்பேட்டையில் தேசிய நதிகள் இணைப்பு விழிப்புணர்வு பேரணி</u>**

ராணிப்பேட்டை, : ராணிப்பேட்டையில் தேசிய நதிநீர் இணைப்புக்குழு மற்றும் பல்வேறு சமூக தொண்டு நிறுவனங்கள் சார்பில் நேற்று தேசிய நதிகள் இணைப்புக்கான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணிக்கு நதிகள் இணைப்புக்குழு செயலாளர் அருண்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். பேரணி ராணிப்பேட்டை ராஜேஸ்வரி தியேட்டர் சந்திப்பு அருகே துவங்கி முக்கிய வீதிகள் வழியாக சென்று முத்துக்கடை காந்தி சிலை சந்திப்பில் முடிவடைந்தது. பேரணியில் ஏர் கலப்பை, பானைகள், மண்வெட்டி மற்றும் நதிநீர் இணைப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் கையிலேந்தி சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. முடிவில் இணைப்புக் குழுவினர் காந்தி சிலைக்கு மலர் மாலைகளை அணிவித்தனர். பேரணியில் நதிகள் இணைப்புக்குழு ஒருங்கிணைப்பாளர் மோகன சுகுமார், உறுப்பினர்கள் கிருஷ்ணன், பாட்டரசர், சிவலிங்கம், தனபால், கே.எம்.பாலு, உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**<u>ஆழியார் அணையின் நீர் மட்டம் 105 அடியாக உயர்வு</u>**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு அணையின் நீர்மட்டம் தற்போது 105 அடியாக உயர்ந்துள்ளது. வினாடிக்கு 1500 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு, திருமூர்த்தி, அம ராவதி ஆகிய அணைகள் மிக முக்கியமானதாகும். ஆழியார் அணைக்கு கான்டூர் கால்வாய் மற்றும் ஊட்டுக்கால்வாய் மூலமும் தண்ணீர் அதிகளவு வருகிறது. தற்போது, மேற்குதொடர்ச்சி மலைபகுதியில், தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவ தால் பிஏபி திட்ட அணை களில் நீர்மட்டம் கிடுகிடு என்று உயர்ந்துள்ளது.

இதில், 120அடி கொண்ட ஆழியார் அணையின் நீர்மட்டம் பல மாதங்களுக்கு பிறகு 100 அடியை எட்டியது. தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்துள்ளதால், ஆழியாறு அணையின் நீர்மட்டம் நேற்று மதியம் 105 அடியை எட்டியது. வினாடிக்கு 1500 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதில் குடிநீர் தேவைக் காக மட்டும், வினாடிக்கு 80 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்துள்ளதால் ஆழியார் அணை விரைவில் நிரம்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், 'ஆழியார் அணையை சுற்றியுள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து தொடர் மழை காரணமாக அணைக்கு தண்ணீர் அதிகளவு வந்து கொண்டிருக்கிறது. இதன் காரணமாக 120 அடி கொண்ட ஆழியார் அணையில் தற்போதைய நீர்மட்டம் 105 அடியை எட்டியுள்ளது. தொடர் மழை காரணமாக அணைக்கு நீர்வரத்து இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஆகவே விரைவில் அணை நிரம்பும் என்று எதிர்பார்க்கிறோம்' என்றனர்.

## <u>கால்நடை தீவன உற்பத்திக்கு 100 சதவீத மானியம் விண்ணப்பிக்க அழைப்பு</u>

காஞ்சிபுரம், : கால்நடை தீவன உற்பத்திக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. காஞ்சிபுரம் கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: கால்நடைகளின் உற்பத்திக்கு தீவனம் மற்றும் பசுந்தீவனம் மிகவும் இன்றியமையாத காரணிகள் ஆகும். பால் உற்பத்தியை பெருக்குவதற்கு தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது மிகவும் இன்றியமையாதது. கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவீனத்தில் 70 விழுக்காடு தீவன மற்றும் பசுந்தீவன உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. கால்நடைகளின் தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனம் உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும் தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்குடன்

கால்நடை துறையின் மூலம் நடப்பு நிதியாண்டில் அரசு மானியத்துடன் கூடிய கீழ்க்கண்ட தீவன பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளது. அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் தீவனப்பயிர் இறவையில் 0.25 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்திட 100 சதவீத மானியத்தில் ரூ2000, மானாவாரியில் 0.25 ஏக்கர் பரப்பில் தீவன சோளம் மற்றும் தீவன தட்டை பயிறு சாகுபடி செய்திட மானியத்தில் ரூ550 வழங்கப்படுகிறது. தெளிப்பு நீர்பாசன கருவிகள் நிறுவுவதற்கு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் ரூ18,750, அகத்திமர வகை தீவன பயிர் சாகுபடி செய்திட 100 சதவீத மானியத்தில் அகத்தி விதைகளும், அசோலா திடல் அமைக்க 100 சதவீத மானியத்தில் ரூ1600 வழங்கப்படுகிறது. மேற்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற விருப்பமுள்ள கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியை சேர்ந்த கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு கொண்டு பயன்பெற விருப்பமுள்ள திட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலம் விண்ணப்பம் அளித்து பயன்பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## <u>மேட்டூர் அணையில் வீணாகும் உபரிநீரை விவசாயத்திற்கு பயன்படுத்த புதிய திட்டம் தேவை திட்டக்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்</u>

சேலம், :மேட்டூர் அணையிலிருந்து வீணாகும் உபரிநீரை சேலம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு பயன்படுத்தும் வகையில் புதிய திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று மாவட்ட திட்டக்குழு கூட்டத்தில் உள்ளாட்சி பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர். சேலம் மாவட்ட திட்டக்குழு கூட்டம் கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நடந்தது. மாவட்ட ஊராட் சிக்குழு தலைவர் சதீஷ்குமார் தலைமை வகித்தார். கூட்டத்தில் பனமரத்துப்பட்டி பேரூராட்சி துணைத்தலைவர் பாலச்சந்திரன் பேசுகையில், ''சேலம் மாவட்டத்தில் தற்போது கடுமையான குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. தற்போது பனமரத்துப்பட்டி ஒன்றியத்திற்கு இருப்பாளி கூட்டுக்குடி நீர் திட்டம் மூலம், குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. நீரை திறந்துவிடும் நேரம் மிகவும் குறைவாக உள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே நீர் திறக்கும் நேரத்தை அதிகப்படுத்த வேண்டும்'' என்றார். ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்

சின்னத்தம்பி பேசுகையில், ''சேலம் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் அதலபாதாளத்திற்கு சென்றுவிட்டது. ஆத்தூர் பகுதியில் 1000 முதல் 1500 அடிக்கு மேல் தோண்டினால் தான் நீர் கிடைக்கிறது. மேட்டூர் அணையிலி ருந்து வீணாகும் உபரிநீரை சரபங்கா நதிக்கு திருப்பி, வசிஷ்ட நதியில் இணைத் தால் நிலத்தடி நீர்மட்டம் உயர்வதோடு தண்ணீர் பிரச்னையும் தீரும்'' என்றார். ஊராட்சிக்குழு கவுன்சிலர் கலையரசன் பேசுகையில், ''மேட்டூரில் அணை இருந்தாலும் அதன் அருகேயுள்ள மேச்சேரி, நங்கவள்ளி, கொளத்தூர் பகுதி மக்களுக்கு இந்த நீர், கானல் நீராகவே உள்ளது. தற் போது 30சதவீதம் முதல் 50 சதவீதம் வரை உபரிநீர் வீணாக கடலில் கலக்கிறது. எனவே, இந்த நீரை மேட் டூர் சுற்றுப்புற விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் குறுகிய கால திட்டம் ஒன் றை நிறைவேற்ற வேண்டும். மேலும் இது குறித்து மாவட்ட நிர்வாகம், முதல்வரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்' என்றார். நங்கவள்ளி ஊராட்சித் தலைவர் ஜீவானந்தம் பேசுகையில், ''மேட்டூரை அடுத்துள்ள சாணார்பட்டி ஊராட்சி மூலக்காடு கணவாய் பகுதியில் பம்பிங் ஸ்டேஷன் அமைத்து, நீரை திருப்பிவிட்டால் நங்கவள்ளி, தாரமங்கலம், மகுடஞ்சாவடி, இடைப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியங்களில் குடிநீர் பிரச்சினை தீரும். எனவே, ரூ.25 கோடி யில் இதற்கான திட்டத்தை அரசு செயல்படுத்த வேண்டும்' என்றார்.

<u>உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர் சிறப்பு கூட்டம்</u>

கிருஷ்ணகிரி,: கிருஷ்ணகிரி மாவட்ட அளவிலான உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கான சிறப்பு ஆலோசனை கூட்டம் நடந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 10 ஒன்றியங்களின் உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து விற்பனையாளர்களுக்கு சிறப்பு தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனை கூட்டம் கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. வேளாண்மை துறை மூலம் நடந்த இந்த கூட்டத்திற்கு வேளாண்மை இணை இயக்குனர் மணி தலைமை வகித்தார். கூட்டத்தில், அனைத்து தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கு உரக்கட்டுப்பாடு சட்டம், பூச்சி

மருந்து சட்டம் மற்றும் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. மேலும், இதில், சிறப்பு தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டது. கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் பேசியதாவது: விவசாயிகளுக்கு எளிதில் புரியும்படி கடையின் விவரம் கொண்ட பலகை வைக்க வேண்டும். விலை பட்டியல் கடைக்கு முன்பு வைக்கப்பட வேண்டும். விற்பனை ரசீது செல்போன் எண் உள்பட முழு முகவரியுடன் வழங்க வேண்டும். இருப்புப்பதிவேடு பராமரிக்க வேண்டும். உரங்கள் பெற்றதற்கான ரசீது பராமரிக்கப்பட வேண்டும். பூச்சி நோய் மருந்துகளுக்கு தனியாக இருப்புப்பதிவேடு, ரசீது வழங்குதல், விற்பனை விலை விவரம் அனைத்தும் பராமரிக்க வேண்டும். உரிமம் பெற்று விற்பனை செய்யப்பட வேண்டும். காலாவதியான பூச்சி, பூஞ்சாணை நோய் மருந்துகளை விற்பனை செய்யக்கூடாது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் வேளாண்மை அலுவலர்களை அணுகி மேலும் விவரங்களை பெற்று, தரமான பூச்சி மருந்துகளை மட்டும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும். வெளிமாநிலங்களுக்கு உரங்கள் விற்பனை செய்ய கூடாது. அவ்வாறு மீறினால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார். இந்த கூட்டத்தில், வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பா) பச்சையப்பன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## விதை சுத்திகரிப்பு நிலையங்களில் அதிகாரிகள் திடீர் ஆய்வு

தாராபுரம், : தாராபுரம் பகுதியில் உள்ள தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்களில், தரமான விதைகள் சுத்திகரிக்கப்படுகிறதா என்று விதைச்சான்று அதிகாரிகள் நேற்று அதிரடி ஆய்வு நடத்தினர். தாராபுரத்தில் விதை சான்றளிப்பு துறை மூலம் அனுமதி பெற்ற 36 தனியார் விதை சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. இதில் சான்று நெல் விதைகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. தற்போது டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி துவங்குவதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். டெல்டா பகுதிகளுக்கு ஏற்ற நெல் ரகங்களுக்கு விதைத் தேவை அதிகம் இருப்பதால், இருப்பில் உள்ள நெல் விதைகளை உடனடியாக சுத்திகரிப்பு மற்றும் சான்று பணி முடித்து, விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற விதைகளை உரிய நேரத்தில்

கிடைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் கோவை விதைச் சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி, ஈரோடு விதைச் சான்று உதவி இயக்குனர் சின்னச்சாமி, அலுவலர்கள் மாரிமுத்து, மோகனசுந்தரம், மணி, கோகுலவாசன், லதா உள்ளிட்டோர் விதை சுத்திகரிப்பு நிலையங்களில் அதிரடி ஆய்வு நடத்தினர். விதை கிடங்குகளில் இருப்பு உள்ள விதைகளில் பூச்சி தாக்குதல் இல்லாமல் விதைகளை பராமரிக்கவும், உரிய கால இடைவெளியில் புகை மூட்டம் மற்றும் மருந்து தெளித்து விதைகளின் முளைப்புத்திறன் பாதிக்காமல் பாதுகாக்கவும் அறிவுறுத்தப்பட்டது. உரிமம் வழங்கப்பட்ட தனியார் விதைச் சுத்திகரிப்பு நிலையங்களில், விதைச் சான்று நடைமுறைகள் முழுமையாக பின்பற்றப்படுகிறதா என்பது உள்ளிட்ட பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

## <u>செம்பனார்கோவில் வட்டாரத்தில் சம்பா, தாளடிக்கு ஏற்ற புதிய நெல் ரகம் அறிவிப்பு</u>

தரங்கம்பாடி, : நாகை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்தில் சம்பா மற்றும் தாளடிக்கு ஏற்ற புதிய நெல் ரகம் சுவர்ணாசப் 1 என்று செம்பனார்கோயில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: நாகை மாவட்டம் செம்பனார்கோவில் வட்டாரத்தில் திருவிளையாட்டம், நெடுவாசல், மேமாத்தூர், கீழ்மாத்தூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளாக இந்த புதிய ரகம் 150 ஏக்கரில் பயிரிடப்பட்டு வருகிறது. சம்பா, தாளடி பருவத்தில் விவசாயிகள ஆடுதுறை38, ஆடுதுறை46 போன்ற மத்திய கால நெல் ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். சுவர்ணாசப்1 என்ற ரகமும், 130-135 நாட்கள் வயதுடைய மத்தியகால ரகமாகும். இந்த அரிசி சன்னமாகவும், சாப்பாட்டிற்கும், இட்லி, தோசைக்கும் ஏற்றதாகவும் உள்ளது. மேலும் அதிக விளைச்சலை தரக்கூடியது. அதாவது ஏக்கருக்கு 3 முதல் மூன்றரை டன் மகசூல் தரும். இயற்கை எரு அதிகம் இட்டால் நல்ல விளைச்சல் தரும். ரசாயன உரங்கள் மிகவும் குறைவாக பயன்படுத்தினால் போதுமானதாகும். அதாவது ஏற்கனவே விவசாயிகள்

உபயோகிக்கும் அளவை விட மூன்றில் 1 பங்கு மட்டும் இட்டால் போதும். இந்த ரகம் ஒற்றை நாற்று முறையில் மிகவும் அதிகமாக 60 முதல் 70 தூர்கள் வரை வெடித்து வளரக்கூடியது. மற்ற ரகங்களை காட்டிலும் பூச்சிநோய் தாக்குதல் மிகவும் குறைவாக உள்ளது. திடீரென்று ஏற்படும் வெள்ளத்தால் 14 முதல் 17 நாட்கள் வரை தண்ணீரில் மூழ்கினாலும் இந்த ரகம் மீண்டும் வளர்ந்து பயன்தரக்கூடியது. சென்ற ஆண்டில் திருவிளையாட்டம் பகுதியை சேர்ந்த விவசாயிகளான துரைராஜ், ஜோதி, கலியபெருமாள், ஆணைமட்டம், குஞ்சிதபாதம் ஆகியோர் பயிரிட்டு எக்டேருக்கு 7 மெ.டன்கள் வரை பெற்றுள்ளனர். இந்த ரகம் இந்த ஆண்டு வேளாண்மைத்துறை மூலம் செம்பனார்கோவில் வட்டாரத்திலுள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேசிய உணவு பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் ஒரு கிலோவிற்கு ரூ.10 மானியத்துடன் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மா மரங்களில் கவாத்து, கிளை படர்வு மேலாண்மை தொழில்நுட்பம் வேளாண் அதிகாரி தகவல்

நாகர்கோவில், : தக்கலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ஷீலா ஜாண் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: மா மரங்களில் கவாத்து செய்து கிளை படர்வு மேலாண்மை தொழில்நுட்பம் கடைபிடிப்பதால் மகசூல் அதிகரிக்கிறது. தொடர்ந்து மகசூல் பெறலாம். தரம் நிலை நிறுத்தப்படுகிறது. காற்றோட்டம், சூரிய வெளிச்சம் கிடைக்கிறது. மரங்கள் அதிக நாட்கள் பலன் தருகிறது. எளிதாக அறுவடை செய்ய லாம். மாவில் கவாத்து செய்தல் என்பது மா மரங்களின் காய்ப்பு முடிந்த கிளைகளின் நுனியை கிள்ளி விடுவது காய்ந்த மற்றும் குறுக்கும் நெடுக்குமாக உள்ள அடர்ந்த கிளைகளை அகற்றுவது, பூச்சி மற்றும் நோய் தாக்கப்பட்ட கிளை களை அகற்றுதல் ஆகும். மா மரங்களின் மொத்த கிளை பரப்பை சரிவர பராமரிப்பதே கிளை படர்வு மேலாண்மை ஆகும். மா மரங்களின் கவாத்து செய்வதற்கு ஏற்ற காலம் ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை உள்ள காலம் ஆகும். கூர்மையான கத்தி கொண்டு தோல்பகுதியில் காயம் ஏற்படாதவாறு குறுக்கும் நெடுக்குமான கிளைகளை வெட்ட வேண்டும். மா

மரத்தின் நடுவில் மேல் நோக்கி வளர்ந்த ஓரிரு கிளைகளை வெட்டுவதன் மூலம் சூரிய வெளிச்சம் ஊடுருவும். இதனால் ஒளி சேர்க்கை எளிதாக நடைபெறுகிறது. மேலும் வளர்ச்சியும் மட்டுப்பட்டு மரம் பரந்து வளரும். மரத்தின் உள் பகுதியில் அதனை அடுத்த தண்டு பகுதியில் காணப் படும் தேவையற்ற கிளை களை அகற்ற வேண்டும். அதிக துளிர் விடும் நுனிக்கிளைகளில் திடகாத்திரமான இரண்டு அல்லது மூன்று கிளைகளை விட்டு மீதமுள்ள துளிர்களை நீக்கிவிட வேண்டும். நுனிகளை 20 செ.மீ அளவு வெட்டி எடுப்பதன் மூலம் அதிக கிளைகள் உற்பத்தி ஆகும். பொதுவாக நன்கு விளைச்சல் தரும் மாமரங்களில் 25 சதவீதம் கடந்த வருட கிளைகளை நீக்க வேண்டும். வயதான மற்றும் உற்பத்தி குறைந்த மரங்களில் 30-40 சதவீதம் கிளைகளை அகற்றுவதால் புதிய கிளை கள் ஊக்குவிக்கப்பட்டு நல்ல மகசூல் கிடைக்கும். 6 ஆண்டுகளுக்கு மேற் பட்ட மாமரம் ஒன்றுக்கு 50 கிலோ தொழுவுரம் 2.2 கிலோ யூரியா, 6.25 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2.5 கிலோ பொட்டாஷ் உரங் களை செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் இட வேண்டும். உரங்களை மரத்தின் தண்டு பகுதியில் இருந்து 45 முதல் 90 செ.மீ தூரத்தில் இலை பரப்பு முடியும் இடத்தில் 15 செ.மீ ஆழத்தில் நன்றாக கலந்து இட வேண்டும். எனவே மா மரங்கள் நடவு செய்துள்ள விவசாயிகள் இந்த தொழில்நுட்பத்தை கடைபிடித்து அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு செய்திகுறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>வறட்சியை சமாளிக்க குதிரைவாலி?சாகுபடி?செய்ய வேளாண்துறை?அறிவுரை</u>

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் வறட்சியை சமாளிக்க குதிரைவாலி சிறுதானிய சாகுபடி செய்ய வேளாண்மைத்துறை அறிவுரை வழங்கியுள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் வேளாண்மை சாகுபடி பணிகள் வடகிழக்கு பருவமழையை நம்பியே நடைபெறுகிறது. முக்கிய பயிரான நெல் சாகுபடி ஏறத்தாழ 1.30 லட்சம் ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. நெல் சாகுபடி பெரும்பாலும் முன் பருவ விதைப்பாக மழையை எதிர்பார்த்து விதைக்கப்படுகிறது. இதேபோன்று சிறுதானிய பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு மற்றும் குறுதானிய பயிரான குதிரைவாலி போன்ற பயிர்கள் செப்டம்பர்

முதல் வாரத்தில் மானாவரி விதைப்பாக விதைக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் வடகிழக்கு பருவமழை போதிய அளவு இல்லாததால் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிரில் மகசூல் பாதிப்பு ஏற்பட்டது. அனால் அதே ஆண்டுகளில் 7 ஆயிரத்து 300 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்ட சிறுதானிய பயிர்களில் பாதிப்பின்றி முழுவதுமாக மகசூல் கிடைத்தது. எனவே விவசாயிகள் வறட்சியை தாங்கி வளரக்கூடிய குதிரைவாலி போன்ற சிறுதானிய பயிர்களை பயிரிடுவதால் வறட்சி காலங்களிலும் வருமானம் கிடைக்க வாய்ப்புள்ளது. குதிரைவாலி குறைந்த தண்ணீரில் வளரக்கூடிய சிறந்த தானிய பயிராகும். ஒரு ஏக்கர் குதிரைவாலி பகுதி மானாவாரியாக சாகுபடி செய்திட ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை செலவாகிறது. ஒரு ஏக்கருக்கு 600 முதல் 800 கிலோ வரை தானிய மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. குதிரைவாலி ஒரு கிலோ ரூ.20 முதல் 25 வரை விற்பனையாகிறது. ஒரு ஏக்கரில் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை வருமானம் வர வாய்ப்புள்ளது. முழு மானாவாரியாக குதிரைவாலி பயிரினை சாகுபடி செய்யும் பட்சத்தில் ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும்.ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள், இயல்பான நெல் சாகுபடி செய்யும் பரப்பில் குறைந்தது 10 சதவீதம் குதிரைவாலி சிறுதானிய பயிரை சாகுபடி செய்தால், வறட்சிக் காலங்களிலும் நம்பகமான குறைந்தபட்ச வருமானம் கிடைக்கும். எனவே விவசாயிகள் குறைந்த தண்ணீர் தேவையுள்ள குதிரைவாலி பயிரினை சாகுபடி செய்து பயனடையலாம் என ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த நடவடிக்கை 5 மாவட்ட விவசாயிகள் சார்பில் ஜெயலலிதாவுக்கு பாராட்டு விழா மதுரையில் 22-ந் தேதி நடக்கிறது**

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த நடவடிக்கை எடுத்த முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு, 5 மாவட்ட விவசாயிகள் சார்பில் மதுரையில் வருகிற 22-ந் தேதி பாராட்டு விழா நடத்தப்படுகிறது. மதுரை, மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களின் விவசாயத்துக்கும், குடிநீருக்கும் முக்கிய ஆதாரமாக விளங்குவது முல்லைப் பெரியாறு அணை. நீர்மட்டம் உயர்வு இந்த அணையின் நீர் மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்துமாறு சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்ட பிறகும், அதை நிறைவேற்ற கேரள அரசு மறுத்தது. இதைத்தொடர்ந்து, தமிழக அரசு சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கை விசாரித்தசுப்ரீம் கோர்ட்டு நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்துமாறு ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை உறுதி செய்து தீர்ப்பு வழங்கியது. இதைத்தொடர்ந்து, அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற் கான நடவடிக்கைகளை தமிழக அதிகாரிகள் மேற்கொண்டனர். அணையின் நீர் மட்டம் உயர்த்தப்படுவதன் மூலம் மேற்கண்ட 5 மாவட்டங்களிலும் கூடுதல் நிலங்கள் பாசன வசதி பெறும். ஜெயலலிதாவுக்கு பாராட்டுவிழா முல்லைப் பெரியாறு அணை பிரச்சினையில் நீண்ட சட்டப் போராட்டம் நடத்தி தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டிய முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு மதுரையில் வருகிற 22-ந் தேதி பாராட்டு விழா நடைபெறுகிறது. மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திண்டுக்கல் ஆகிய 5 மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில் இந்த பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக முதல்-அமைச்சர் ஜெயலலிதா அன்று பிற்பகல் 2 மணிக்கு மதுரை வருகிறார். பூமிபூஜை பாராட்டு விழா நடத்துவதற்காக மதுரை ரிங் ரோட்டில் உள்ள மஸ்தான்பட்டியில் இடம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. அங்கு நிலத்தை சுத்தம் செய்து பந்தல் அமைக்கும் பணியை தொடங்குவதற்கான பூமிபூஜை நேற்று காலை 8 மணியளவில் நடைபெற்றது. அப்போது பந்தல்கால் நடப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். அமைச்சர்கள் நத்தம் விசுவநாதன், செல்லூர் ராஜு, ஆர்.பி. உதயகுமார், சுந்தர்ராஜன், ராஜேந்திர பாலாஜி, கோபாலகிருஷ்ணன் எம்.பி., மதுரை மேயர் ராஜன்செல்லப்பா, டெல்லி சிறப்பு பிரதிநிதி எஸ்.டி.கே.ஜக்கையன், எம்.எல்.ஏ.க்கள் ஏ.கே.போஸ், முத்துராமலிங்கம், சாமி, தமிழரசன், கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். வரவேற்பு ஏற்பாடு பாராட்டு விழா குறித்து விவசாயிகள் சங்க தலைவர் மாணிக்கம் கூறுகையில், ‘‘பெரியாறு அணை நீர்மட்டத்தை உயர்த்தக்கோரி பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை முதல்- அமைச்சர் ஜெயலலிதா நிலைநாட்டி உள்ளார். பாராட்டு விழாவில் பங்கேற்க மதுரை வரும் முதல்-அமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்க முடிவு செய்துள்ளோம்’’ என்றார் .ஓ.பன்னீர்செல்வம் பின்னர் மேட்டூர் அணை திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் இந்த பாராட்டு விழா பற்றி கூறியதாவது:- முதல்-அமைச்சர் ஜெயலலிதா சட்டப்போராட்டம், தொடர் போராட்டம் என உச்சநீதிமன்றம் வரை சென்று முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை பெற்றுத்தந்து உள்ளார். இதற்காக தென்மாவட்ட மக்கள், தமிழக விவசாயிகள் மற்றும் முல்லைப் பெரியாறு அணையின் மூலம் குடிநீர் பெறும் பொதுமக்கள் சார்பாக வருகிற 22-ந் தேதி மதுரையில் முதல்-அமைச்சருக்கு மாபெரும் நன்றி மற்றும் பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இவ்வாறு அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கூறினார்.

## உபரிநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் பாசனத்துக்கு பயன்படுத்த வேண்டும்

ஈரோடு, மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரிநீரை ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பாசனத்துக்கு பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜி.கே.மணி கூறினார். மாணவர்களை சந்தித்தார் ஈரோட்டில் கொங்கு தேச மக்கள் கட்சி என்ற புதிய கட்சி தொடக்க விழா நடந்தது. இந்த விழாவில் கலந்து கொள்ள வந்த பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் உள்ள சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசு கல்லூரியாக அறிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ந்து 3-வது நாளாக உண்ணாவிரதம் இருந்து வந்த மாணவ-மாணவிகளை சந்தித்து பேசினார். அப்போது அவர் மாணவ-மாணவிகளிடம், ‘உங்கள் கோரிக்கை நியாயமானது. அதே நேரத்தில் நீங்கள் உங்கள் உடலை வருத்தி உண்ணாவிரதம் இருப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது. மனம் வேதனைப்படுகிறது. உண்ணாவிரதத்தால் மிகவும் சோர்ந்து உள்ளீர்கள். ஆதரவு எனவே நீங்கள் உண்ணாவிரதத்தை கைவிட்டு வேறு விதமான போராட்டங்கள் நடத்தலாம். உங்களுடைய அனைத்து போராட்டத்துக்கும் பா.ம.க. தலைமையில் சமுதாய ஜனநாயக கூட்டணி கட்சியினர் கண்டிப்பாக ஆதரவு கொடுப்போம்‘ என்றார். அப்போது மாணவர்கள் கூறுகையில், ‘நாங்கள் தொடர்ந்து 27 நாட்களாக போராட்டம் நடத்தினோம். ஆனாலும் எந்தவித அறிவிப்பும் அரசிடம் இருந்து வரவில்லை. எனவேதான் கடைசி முயற்சியாக தொடர்ந்து 3-வது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறோம்‘ என்றனர். இதையடுத்து அங்கிருந்தபடியே கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனரை தொடர்பு கொண்ட பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி, மாணவ-மாணவிகளின் போராட்டம் குறித்து அரசின் கவனத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். போராட்டம் பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-. வீணாகாமல்... தொடர்ந்து அவர் மேலும் கூறுகையில், ‘சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணை தற்போது நிரம்பும் நிலையில் உள்ளது. எனவே மேட்டூர் அணையின் கிழக்கு மற்றும் மேற்கு கரை வாய்க்கால்களில் பாசனத்துக்காக தண்ணீரை திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த தண்ணீர் மூலம் ஈரோடு, சேலம், நாமக்கல் மாவட்டங்களை சேர்ந்த சுமார் 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கடந்த 1972-ம் ஆண்டு முதல் இதுவரை 42 ஆண்டுகள் மேட்டூர் அணை 18 முறை முழுக்கொள்ளளவை எட்டி உபரிநீர் வெளியேறி உள்ளது. வெளியேறும் இந்த உபரி நீர் முழுவதும் கடலில் சென்று கலக்கிறது. எனவே மேட்டூர் அணையில் இருந்து வெளியேறும் உபரிநீர் ஒரு சொட்டுக்கூட வீணாகாமல் பாசனத்துக்கு பயன்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏரி, குளம் அமைக்க வேண்டும் இதற்காக தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள ஏரி, குளம் ஆகியவற்றுக்கு வாய்க்கால் வெட்டி இந்த நீரை திருப்பி விடவேண்டும். மேலும் புதிதாக ஏரி மற்றும் குளங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் மேட்டூர் அணை நீர் வீணாவதை தடுக்க முடியும். ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் பாசனத்துக்கு தண்ணீர் திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்,'என்றார். பேட்டியின் போது, கொங்குநாடு ஜனநாயக கட்சி மாநில தலைவர் ஜி.கே.நாகராஜ், தேசிய பார்வார்டு பிளாக் கட்சி நிறுவனர் பி.டி.அரசகுமார், தமிழ்நாடு தெலுங்கு மக்கள் கட்சி நிறுவனர் ஜே.ராஜ்குமார், பா.ம.க. மாநில துணைப்பொதுச்செயலாளர் கா.சு.மகேந்திரன், மாவட்ட செயலாளர் ஆறுமுகம் உள்பட பலர் உடன் இருந்தனர்.

## பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.2 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை



பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.2 கோடிக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. கொப்பரை தேங்காய் ஏலம் பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், திருச்செங்கோடு, அந்தியூர், கோபி, குன்னத்தூர், பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். மொத்தம் 3 ஆயிரத்து 700 மூட்டைகளில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய்கள் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் (கிலோ) 109 ரூபாய் 25 காசு முதல் 114 ரூபாய் 80 காசு வரை ஏலம் போனது. 2-ம் தரம் கொப்பரை தேங்காய் (கிலோ) 65 ரூபாய் 10 காசு முதல் 109 ரூபாய் வரை ஏலம் போனது. மொத்தம் 2 கோடியே 2 லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆனது. கடந்த புதன்கிழமையை விட கிலோவுக்கு 1 ரூபாய் கூடுதலாக கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. சென்னை சானிடோரியம், தூத்துக்குடி, பழனி, காங்கயம் ஆகிய பகுதிகளில் இருந்து எண்ணை மில் உரிமையாளர்களின் பிரதிநிதிகள் வந்து கொப்பரை தேங்காயை போட்டி போட்டு வாங்கி சென்றனர். தேங்காய் விற்பனை பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. இதற்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் ஒரு லட்சம் தேங்காய்களை கொண்டு வந்து இருந்தனர். இதில் முதல் தரம் தேங்காய் ஒன்று 16 ரூபாய் முதல் 17 ரூபாய் வரை விற்பனை ஆனது. 2-ம் தரம் தேங்காய் 12 ரூபாய் முதல் 13 ரூபாய் வரை விற்பனை ஆனது. மொத்தம் ரூ.15 லட்சத்துக்கு தேங்காய் விற்பனை ஆனது.

## விவசாயிகளின் நிதி பங்களிப்பில் கீழ்பவானி பிரிவு வாய்க்கால் கரை அகலப்படுத்தப்பட்டது

கோபிசெட்டிபாளையம், கோபி அருகே விவசாயிகளின் நிதி பங்களிப்புடன் ரூ.4 லட்சம் செலவில் கீழ்பவானி பிரிவு வாய்க்கால் கரை அகலப்படுத்தப்பட்டது.

பிரிவு வாய்க்கால்

ஈரோடு மாவட்டம் கீழ்பவானி வாய்க்கால் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த நிலையில் கீழ்பவானி வாய்க்காலின் கிளை, பிரிவு, கொப்பு வாய்க்கால்களில் சேதமடைந்த மதகுகள், வாய்க்கால் கரைகளை சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். இதேபோல் கோபிசெட்டிபாளையம் அருகே உள்ள கீழ்பவானி பிரதான வாய்க்காலில் இருந்து பிரிந்து செல்லும் கொளத்துப்பாளையம் பிரிவு வாய்க்காலின் கரையை அகலப்படுத்த வேண்டும் என்றும் விவசாயிகள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வந்தனர். கொளத்துப்பாளையம் பிரிவு வாய்க்கால் மூலம் சுமார் 750 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. கொளத்துப்பாளையத்தில் இருந்து சந்திராபுரம் வரையுள்ள விவசாய நிலங்கள் இந்த பிரிவு வாய்க்கால் மூலம் பயன்அடைகின்றன. இந்த விவசாய நிலங்களுக்கு இடுபொருட்கள் கொண்டு செல்லவும், விளைபொருட்களை விற்பனைக்காக கொண்டு செல்வதற்கும் போதிய சாலை வசதி கிடையாது.

ரூ.4 லட்சம்

கொளத்துப்பாளையம் பிரிவு வாய்க்காலின் கரை குறுகலான பாதையாக இருந்ததால் விளைபொருட்களை வெளியே கொண்டு செல்வதற்கும், இடுபொருட்களை விவசாய நிலங்களுக்கு கொண்டு செல்வதற்கும் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டனர். எனவே கொளத்துப்பாளையம் பிரிவு வாய்க்காலின் குறுகலான கரையை அகலப்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இந்த நிலையில் பொதுப்பணித்துறை அனுமதியுடன் கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் சபையின் யு–7 கோட்டத்தை சேர்ந்த 30–க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஒன்றுசேர்ந்து கரையை அகலப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இதற்கான செலவுகளை விவசாயிகளே ஏற்று கொண்டனர். சுமார் ரூ.4 லட்சம் செலவில் 2 கிலோ மீட்டர் தொலைவிற்கு கரைகள் அகலப்படுத்துப்பட்டது.

பொதுப்பணித்துறை

கொளத்துப்பாளையம் பிரிவு வாய்க்காலின் கரை அகலப்படுத்தப்பட்ட பிறகு விவசாயிகள் எளிதாக லாரி, டிராக்டர் மூலம் விவசாய பொருட்களை கொண்டு செல்ல முடிகிறது. மேலும், விவசாய நிலங்களில் ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டும் என்றாலும் எளிதாக வாகனங்களை கொண்டு செல்ல முடிகிறது. விவசாயிகள் நிதியில் அகலப்படுத்தப்பட்ட வாய்க்கால் கரையை

பொதுப்பணித்துறை அதிகாரிகள் பார்வையிட்டனர். பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பி.திருமூர்த்தி, உதவி பொறியாளர் பி.சாலினிபிரியா, ஆய்வாளர் ஜோதி ஆகியோர் பார்வையிட்டனர். அப்போது கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு இணைச்செயலாளர் பா.மா.வெங்கடாசலபதி, பகிர்மான கமிட்டி தலைவர் கே.என்.செங்கோட்டையன், யு7 சபை தலைவர் தங்கமுத்து, பொருளாளர் பெருமாள், விவசாயிகள் ஈஸ்வரன், பழனிசாமி, தங்கமுத்து, குருமூர்த்தி உள்பட பலர் இருந்தனர்.

**<u>சம்பா பருவத்திற்கு தேவையான விதை நெல் போதுமான அளவு இருப்பு உள்ளது உதவி இயக்குனர் தகவல்</u>**



சம்பா பருவத்திற்கு தேவையான விதை நெல் ரகங்கள் போதுமான அளவு இருப்பு உள்ளது என்று உதவி இயக்குனர் கூறினார்.
ஆய்வு
கரூர் மாவட்டம் குளித்தலை அருகே உள்ள இனுங்கூரில் அரசு விதை சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. இதை கரூர் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குனர் கைலாசபதி நேரில் சென்று ஆய்வு செய் தார். அப்போது அவர் கூறிய தாவது;–

இனுங்கூரில் கரூர் மாவட்ட விவசாயிகளுக்கு தேவைப்படும் சான்று பெற்ற நெல் விதைகள் சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வரு கிறது. அதன்படி இங்கு தற்போது நடப்பு சம்பா பருவத்தில் கரூர் மாவட்டத்திற்கு தேவையான சான்று பெற்ற நெல் விதைகள் முழுவதுமாக சுத்தம் செய்யும் பணி முடிக்கப்பட்டு உள்ளது. இருப்பு உள்ளது இதே போன்று சான்று அட்டை பொறுத்தப்பட்டு விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய தயார் நிலையில் உள்ளது. சம்பா பருவத்திற்கு ஏற்ற

ரகங்களான சம்பா மசூரி, ஐ.ஆர்.20, ஆடுதுறை–39, மேம் பட்ட வெள்ளை பொன்னி, கே(ஆர்) 50 ஆகிய விதை நெல்கள் உள்ளன. மொத்தத்தில் சம்பா பரு வத்திற்கு தேவையான விதை நெல் போதுமான அளவு இருப்பு உள்ளது. இந்த விதை நெல்களை பெற்று விவசாயி கள் பயன் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## <u>மருத்துவ குணம் மிக்க நாவல் பழங்கள் வரத்து அதிகரிப்பு ஒரு கிலோ ரூ.200–க்கு விற்கப்படுகிறது</u>



பழங்கள், மனிதனுக்கு ஆரோக்கியத்தை அள்ளித் தருபவை. நோய்கள் ஏதும் அணுகாதவாறு உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கக் கூடியவை. அவை நாவுக்கு சுவையையும், மணத்தையும் கொடுத்து, உடலுக்கு வலுவையும் கொடுக்கின்றன. இந்த வகையில் நாவல் பழம் முக்கியத்துவம் பெறுகிறது. நாவல் பழத்தின் பயன்பாடு அவ்வையார் காலத்தில் இருந்தே முக்கிய இடம் பிடித்து வந்திருப்பதை பல புராணக்கதைகள் மூலம் அறிவோம். தன்னுடைய பெற்றோரிடம் இருந்து கோபித்துக்கொண்டு மலைக்கு சென்ற கடவுள் முருகன், நாவல்மரத்தின் மீது அமர்ந்து கொண்டு அந்த வழியாக வந்த அவ்வைப் பாட்டியிடம் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என கேட்டதாக வரலாறு கூறுகிறது. அதை சுட்டிக்காட்டும் நாவல் மரம் இன்றளவும் அழகர் மலையில் உள்ள சோலைமலை முருகன் கோவிலுக்கு அருகில் உள்ளது.

<u>மருத்துவகுணம்</u>

வரலாற்று புகழ் மட்டுமல்லாது எண்ணற்ற மருத்துவ குணங்களும் நாவல்பழத்தில் புதைந்து உள்ளன. குறிப்பாக நீரிழிவு நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக இந்த

பழம் குறிப்பிடப்படுகிறது. நாவலில் கொடிநாவல், குழிநாவல், கருநாவல், சம்புநாவல், நாட்டு நாவல் என பல வகைகள் உள்ளன. இதில் சிறப்பம்சமாக, இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என மூன்று சுவையும் நிறைந்துள்ளன. ஏரிக்கரை களிலும், கண்மாய், குளக்கரையிலும் நாவல் மரம் பெரிதாக வளர்ந்திருக்கும். தற்போது நவீன தொழில் நுட்பத்தால் நாவற்பழம் பெரியதாகவும், அதிகமாகவும் விளைவிக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் பாலமேடு, சத்திரப்பட்டி, அழகர்கோவில் போன்ற மலையும் மலை சார்ந்த பகுதிகளிலும் நாவல்மரங்கள் ஏராளமாக உள்ளன. ரூ.200–க்கு விற்பனை இந்த பகுதிகளில் இருந்து தான் நாவல்பழங்கள் அதிக அளவில் மதுரை மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. இந்த பழங்களில் மருத்துவ குணங்கள் நிறைந்து காணப்படுவதாலும், குறைந்த அளவே விளைச்சல் இருப்பதாலும் இதன் விலை சற்று அதிகமாகவே உள்ளது. தற்போது மதுரை மார்க்கெட்டுகளில் கிலோ 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கடந்த ஜூலை மாதம் தொடங்கி செப்டம்பர் வரை தான் சீசன் நீடிக்கும். நாவல் மரத்தின் அனைத்து பாகங்களுமே மருத்துவப் பயன் கொண்டவை. இதில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்து, வைட்டமின் பி போன்ற தாதுக்கள் நிறைந்துள்ளன. நாவல் பழத்தின் துவர்ப்புச் சுவை ஒரு சிறப்பு அம்சமாகும். நாவல் பழம் இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். இரத்தத்தில் இரும்புச்சத்தை அதிகரிக்கும். இதனால் இரத்தத்தின் கடினத் தன்மை மாறி இலகுவாகும். மேலும் இரத்தத்தில் கலந்துள்ள வேதிப் பொருட்களை நீக்கி சிறுநீர் மூலம் வெளியேற்றும். இதுபோன்று பல மருத்துவ குணங்களை இது தன்னுள் அடக்கி உள்ளது என்பது மருத்துவர்களின் கருத்து.

## <u>ஹைவேவிஸ் பகுதியில் தொடர் மழையால் அணைகள் நிரம்பின சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு</u>



ஹைவேவிஸ் மலைப் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் இங்குள்ள அணைகள் நிரம்பி வருகின்றன. குளு, குளு சீசன் தொடங்கி உள்ளதால் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்துள்ளது. ஹைவேவிஸ் தேனி மாவட்டம் சின்ன மனூரில் இருந்து 36 கிலோ மீட்டர் தூரத்தில் ஹைவேவிஸ் மலை பகுதி அமைந்துள்ளது. ஹைவேவிஸ், மணலாறு, வெண்ணியாறு, இரவங் கலாறு, மகாராஜாமெட்டு ஆகிய பகுதிகள் இங்குள்ளன. பேரூராட்சி பகுதியான ஹைவேவிசில் தேயிலை தோட்டங்கள் அதிகம் உள்ளன. மினி காஷ்மீர் என்று சொல்லும் அளவிற்கு இயற்கையின் கொடையாக ஹைவேவிஸ் உள்ளது. கையை உயர்த்தினால் தொட்டுவிடும் தூரத்தில் மேக கூட்டம் நகர்ந்து செல்கிறது. கோடை காலத்திலும் சாரல் மழை பெய்து கொண்டு இருக்கும். தற்போது தொடர் மழையால் இங்குள்ள ஹைவே விஸ், தூவானம், மணலாறு, இரவங்கலாறு, வெண்ணியாறு ஆகிய அணைகள் நிரம்பி வருகின்றன. இங்கு இருந்து சுமார் 15 கி.மீ. தூரம் சுரங்க பாதை வழியாக சுருளியாறு மின் நிலையத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறது. சேதமடைந்த சாலை தூவானம் நிறைந்து வரும் தண்ணீர் மலைப்பாதை வழி யாக சுருளி அருவிக்கு வரு கிறது. தற்போது தொடர் மழையால் ஹைவேவிஸ் பகுதியில் குளு, குளு சீசன் தொடங்கி உள்ளதால் சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து உள்ளது. சாலை கள் குண்டும், குழியுமாக சேதம் அடைந்து இருப்பதால் சுற்றுலா பயணிகள் மோட்டார்சைக்கிள் மூலம் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. பேரூராட்சி நிர்வாகம் சார்பில் சுற்றுலா மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு தங்குவதற்கு ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்யலாம். தூவானம் அணை பகுதிக்கு செல்லும் சாலையை தனியார் நிர்வாகம் அடைத்து வைத்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் தூவானம் பகுதியின் இயற்கை அழகை ரசிக்க முடியாமல் திரும்பி செல்கின்றனர். மேலும், இந்த பகுதியில் உள்ள கோவிலுக்கு கூட பொதுமக்கள் செல்ல முடியவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த பிரச்சினையில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் வலியுறுத்தலாக உள்ளது.

## <u>சிறுதானிய உணவு வகைகளை உட்கொண்டால் நோயின்றி வாழலாம் பாரம்பரிய உணவு திருவிழாவில் கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் பேச்சு</u>

சிறுதானிய உணவு வகைகளை உட்கொண்டால் நோயின்றி வாழலாம் என்று திருச்சியில் நடந்த பாரம்பரிய உணவுதிருவிழாவில் கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் பேசினார். பாரம்பரிய உணவு திருவிழா சமூகநலம் மற்றும் சத்துணவுத்

திட்டத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் திருச்சி மாவட்டம் சார்பில் பாரம்பரிய உணவுத்திருவிழா திருச்சி கலையரங்க திருமண மண்டபத்தில் தொடங்கியது. தொடக்க நிகழ்ச்சிக்கு திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் தலைமை தாங்கினார். அரசு தலைமை கொறடா மனோகரன், குமார் எம்.பி., பரஞ்சோதி எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கதர் மற்றும் கிராமத்தொழில்துறை அமைச்சர் பூனாட்சி கலந்து கொண்டு, பாரம்பரிய உணவு மற்றும் சிறுதானிய உணவு வகைகளுக்கான விளக்க கையேட்டினை வெளியிட்டார். நிகழ்ச்சியில் கலெக்டர் ஜெயஸ்ரீமுரளிதரன் பேசியதாவது:–

நோயின்றி வாழலாம் தமிழகத்தில் மொத்த உணவு உற்பத்தியில் 86 சதவீதம் பரப்பளவில் அரிசி உற்பத்தியாகிறது. 11 சதவீதம் சிறுதானிய வகைகள் உற்பத்தியாகிறது. 3 சதவீதம் பருப்பு வகைகள் உற்பத்தியாகிறது. இப்போது சிறுதானிய வகைகளின் உற்பத்தி செய்யும் பரப்பளவு குறைந்துகொண்டே செல்கிறது. சிறுதானிய வகைகளை பொதுமக்கள் அதிகஅளவில் சாப்பிடாததே அதற்கு காரணம். பெரும்பாலான மாணவ–மாணவிகள் கடைகளில் பாக்கெட்டில் அடைத்து விற்கும் தின்பண்டங்களையே வாங்கி சாப்பிடுகிறீர்கள். இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும். 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறுதானிய உணவுவகைகளை மக்கள் உட்கொண்டு உள்ளனர். அதனால் தான் அந்த காலத்தில் நோயின்றி வாழ்ந்தார்கள். சிறுதானிய உணவுகளை உட்கொண்டால், நோயின்றி வாழலாம். இவ்வாறு அவர் பேசினார். இதில் மாநகராட்சி மேயர் ஜெயா, மருதராஜா எம்.பி., எம்.எல்.ஏக்கள் சிவபதி, சந்திரசேகர், இந்திராகாந்தி, மாவட்ட ஊராட்சி தலைவர் ராஜாத்தி, கோட்ட தலைவர்கள் சீனிவாசன், ஞானசேகர், மனோகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட திட்ட அலுவலர் தமீமுன்னிசா வரவேற்றார். குழந்தை வளர்ச்சித்திட்ட அலுவலர் ராணி நன்றி கூறினார். சிறுதானிய உணவு வகைகள் முன்னதாக பாரம்பரிய உணவு திருவிழா அரங்கில் அமைக்கப்பட்டு இருந்த பல்வேறு அரங்குகளில் அமைச்சர் பூனாட்சி மற்றும் எம்.எல்.ஏக்கள் பார்வையிட்டு, உணவு வகைகளை

சாப்பிட்டு பார்த்தனர். உணவுதிருவிழா அரங்கில் சமூகநலத்துறை, வேளாண்துறை, மகளிர்சுயஉதவிக்குழு, சிறைச்சாலை ஆகியவை சார்பில் அமைக்கப்பட்டு இருந்த அரங்குகளில் தினைபொங்கல், குதிரைவாலி, சாம்பார் சாதம், இளநீர் பாயாசம், காளான், கேழ்வரகு, கம்மங்கூழ், கோதுமை, போன்ற பாரம்பரிய உணவுகள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருந்தன. இந்த நிகழ்ச்சி தொடர்ந்து 16–ந் தேதி வரை நடக்கிறது.

## <u>ரூ.30 செலுத்தி விதை பரிசோதனை செய்து கொள்ளலாம்</u>

விழுப்புரம், ரூ.30 செலுத்தி விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் என வேளாண்மை அலுவலர் பிரேமலதா தெரிவித்துள்ளார். விதை பரிசோதனை விழுப்புரம் விதைப் பரி சோதனை நிலைய வேளாண்மை அலுவலர் பிரேமலதா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:- விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக வளாகத்தில் செயல்படும் விதை பரிசோதனை நிலையத்தின் சேவைகளை மாவட்ட விவசாயிகள் பயன்படுத்தி கொள்ளலாம். இங்கு விதையின் ஈரப்பதம், முளைப்புத் திறன், புறத்தூய்மை மற்றும் பிற ரக கலப்பு விகிதம், பூச்சித் தாக்குதல் ஆகியவை பரி சோதனை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பயிருக்கும் விதை மாதிரியின் அளவு மாறுபடும், விதைப் பரி சோதனைக்கு விதை மாதிரி சேகரிக்கும் போது நெல் விதை 400 கிராம், மக்காச்சோளம் 1 கிலோ, சோளம் 900 கிராம், கேழ்வரகு 60 கிராம், கம்பு 150 கிராம், நிலக்கடலை 1 கிலோ என்ற அளவில் அனுப்ப வேண்டும். 30 ரூபாய் கட்டணம் விதை மாதிரியின் விவரம் தேவைப்படும் பகுப்பாய்வு முடிவுகள் மற்றும் முடிவுகள் அனுப்ப வேண்டிய முக வரியை விழுப்புரம் விதைப் பரிசோதனை வேளாண்மை அலுவலருக்கு கடிதம் அனுப்ப வேண்டும். ஒரு விதை மாதிரிக்கு 30 ரூபாய் பரிசோதனை கட்டணம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு பயிருக்கும் முளைப்புத்திறன் பகுப்பாய்வு காலை 7 முதல் 14 நாட்கள் வரையறுக்கப்பட்டுள்ளது. பகுப்பாய்வு முடிந்தவுடன் முடிவறிக்கை குறிப்பிட்ட முக வரிக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.